வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் 10 சதவித லாபமாவது கிடைக்கும் என்ற உறுதி ஏற்பட்டவுடன், போர்டு இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, 1961-ல் மரக்காணம் பகுதிக்கு மின்சார விஸ்தரிப்பு கொடுக்கப்பட்டது. அதற்குப் பக்கத்தில் உள்ள மீனவர் பகுதியில் மின்சார வசதி கிடையாது என்ற காரணத்திற்காக இந்தக் கேள்வி கேட்டேன். ஆனால் சில கிராமங்களில் லைன் இழுத்திருக்கிறார்கள். இன்னும் பல கிராமங்களில் லைன் இழுக்கவில்லை. 10 சதவிகிதம் லாபம் கிடைக்க வேண்டும் என்று கணக்கு வைத்திருக்கிறார்கள். கணக்கிற்காக சர்க்கார் இருக்கிறதா அல்லது மக்கள் வசதிக்காக சர்க்கார் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லாபம் இல்லாமல் அல்லது கட்டுபடி ஆகாமல் கமர்ஷியல் ஆர்கனேஸேஷன் ஆகிய எலெக்ட்ரிசிடி போர்டு எந்தக் காரியத்தையும் மேற்கொள்ள முடியாது.

* 353 **கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுகாவில் மின்சார வசதி தேவை என்று எத்தனை கிராமங்களிலிருந்து அரசாங்கத்திற்கு மனுக்கள் வந்துள்ளன?

(இ) அவைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) விவரங்கள் பின்வருமாறு :—

சிதம்பரம் வட்டத்தில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை.	321
மனுச்செய்துகொண்ட கிராமங்களின் எண்ணிக்கை.	319
ஒப்பளிப்பு வழங்கப்பட்டவை	314
முடிவு செய்யப்பட்டு வருபவை	5
பரிசிலனையின்கீழ் இருப்பவை	2
மின் வசதி அளிக்கப்பட்டவை	93
1966-67-ல் மின் வசதி அளிக்கப்பட விருப்பவை	30
நான்காம் திட்டம் முடிவதற்கு முன் படிப்படியான திட்டத்தின்கீழ் மின்வசதி அளிக்கப்பட்ட எஞ்சியுள்ள கிராமங்கள்.	198